# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 7/2023 தேதி- 25.02.2026
(PW1.) – ஜார்ஜ் ஸ்டீபன்சன்

**1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

1. வா.சா.ஆ.1 ஆவணமான மாதிரி வரைபடம் உண்மையான கிடப்பின் படியும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின் படியும் இல்லை என்றால் அளவுகள் வேறுபடலாம். நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் 1 வது பிரதிவாதியின் சொத்தின் கிழக்கு பக்கத்தில் காம்பவுண்ட் சுவர் F,E ஆக அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதில் சுவருக்கு அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு கிழக்கு பக்கத்தில் இரப்பர் மரங்கள் நடப்பட்டுள்ளது என்றால் இல்லை.

2. வழக்கு B பட்டிகை சொத்தில் இரப்பர் மரங்கள் ஏதும் இல்லை என்றால் எனக்கு உரிமைப்பட்ட சொத்திற்குள் இரப்பர் மரங்கள் உள்ளது. என் கைவசம் உள்ள இடத்தில் தான் இரப்பர் மரங்கள் என்னால் நடப்பட்டுள்ளது என்றால் புல எண். 118/15 ல் என்னால் நடப்பட்டு இருந்த இரப்பர் மரத்தின் ஒரு வரிசையை பிரதிவாதிகள் பிடுங்கி எறிந்துவிட்டார்கள். இரப்பர் மரத்தை வெட்டியதாகவோ, பிடுங்கியதாகவோ ஏதாவது புகார் அளித்துள்ளேனா என்றால் புதுக்கடை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன்.

3. மேற்சொன்ன புகார் அளித்தற்கான ஆவணம் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கைவசம் உள்ள சொத்தில் தான் இரப்பர் மரங்களை வைத்தேன் என்றாலும், பிரதிவாதிகள் நான் சொல்வது போல் இரப்பர் மரங்கள் எதையும் பிடுங்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு A பட்டிகை சொத்திற்கும், வழக்கு B பட்டிகை சொத்திற்கும் சென்று வர புல எண்.118/14 வழியாக தான் சென்று வரமுடியும் என்றால் சரிதான்.

4. மேற்சொன்ன புல எண்.118/14 என் கைவசத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் உள்ளது என்றால் நினைவில் இல்லை. என் மனைவி கருங்கல் சார் பதிவாளர் அலுவலகத்தில் வேலை பார்த்தார் என்றால் தெரியாது. என் மனைவியின் செல்வாக்கையும் பயன்படுத்தி வருவாய் துறை அதிகாரிகளின் உதவியுடன் தயார்

செய்யப்பட்ட போலியான ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமான பாகப்பிரிவினை உடன்படிக்கை கிடப்பின் படி பாகம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல, கிடப்பின் படியும், ரீசர்வே வரைபடத்தின் படியும் பாகம் ஏற்படுத்தப்பட்டது.

5. 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் கைவசத்தில் உள்ள புது புல எண்.118/15 ல் உள்ள சொத்தை எந்த காலத்திலும் நான் கைவசம் வைத்து அனுபவிக்கவில்லை என்றால் பிரதிவாதிகள் இரப்பர் மரங்களை பிடுங்கும் வரை எங்கள் கைவசத்தில் தான் இருந்தது. 2013 முதல் 2020 வரை நான் வெளியூரில் இருந்தற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அந்த சமயத்தில் ஆக்கிரமிப்பு செய்துக் கொண்டார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. மே மாதம் 2021 ஆம் ஆண்டில் என் முன்னிலையில் வழக்கு பட்டிகை சொத்தை கீழ்குளம் கிராம நிர்வாக அலுவலர் பார்வையிட்டார் என்றால் பார்வையிட்டு 1 வது பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததை உறுதி செய்தார். என்னால் நடப்பட்ட இரப்பர் மரங்கள் 1 வது பிரதிவாதியின் வீட்டின் மேல் விழுந்து கிடப்பதாக புகார் அளித்ததன் பேரில் அதை விசாரணை செய்ய கீழ்குளம் கிராம நிர்வாக அலுவலர் பார்வையிட்டார் என்றால் சரிதான், அதன் பிறகு வழக்கு பட்டிகை சொத்தை அளந்து ஆக்கிரமிப்பை உறுதி செய்தார்.

7. மே மாதம் 2022 ஆம் ஆண்டில் என்னால் நடப்பட்ட இரப்பர் மரங்கள் 1 வது பிரதிவாதியின் வீட்டின் மேல் விழுந்து கிடப்பதாக 1 வது பிரதிவாதி புதுக்கடை காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).